Registered as a News Paper பக்கங்கள் 06 விலை ரூபா: 5-00

# ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்:- 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 14 (27 - 05 - 1992) புதன்கிழமை ஓசை: 99

## தடும்பப் பதிவு அட்டையை உடனடியாகப் பெறவும்

யாழ். மாவட்டத்தில் நிரந்தரமாக வாழுகின்ற மக்களுக்கான குடும்பப்பதிவு அட்டைகள் யாவும் நிறைவு பெற்றமையினால் பொதுமக்கள் தங்களுக்குரிய குடும்பப்பதிவு அட்டைகளைத் தங்கள் பிரிவுக் கிராமசேவகரிடமிருந்து பெற்று வைத்திருக்குமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள். வெளிமாவட்டங்களில் இருந்து அகதிகளாக இடம்பெயர்ந்து வந்த மக்கள் பற்றிய பூரண விபரத்தை ஒவ்வொரு கிராமசேவையாளர்களும் தமது பிரிவு உதவி அரசாங்க

[6ஆம் பக்கம் பார்க்க]

## விடுதலைப் புலிகள் மீதான தடை

# இந்தியாவின் தமிழருக்கு எதிரான ஒட்டு மொத்தப் போர்ப் பிரகடனம்

## இராணுவ அதிரடிப்படைமீது கண்ணிவெடித் தாக்கு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் திருக்கோவில் இராணுவ முகாமிலிருந்து கஞ்சிகுடி ஆறு இராணுவ முகாமிற்கு சென்றுகொண்டிருந்த சிறிலங்கா இராணுவ அதிரடிப்படையினர் மீது விடுதலைப் புலிகள் கண்ணிவெடித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத்தாக்குதலால் படையினர் உணவுப் பொருள்களை ஏற்றிக்கொண்டுசென்ற உழவு இயந்திரம் முற்றாகச் சேதமடைந்தது. படையினர் தரப்பில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவில்லை.

## ஐ. நா. அதிகாரிகள் செல்ல அனுமதி மறுப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தங்கியிருக்கும் அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் சபையைச் சேர்ந்த அதிகாரிகள் குழுவினரின் பயணம் பிற்போடப்பட்டிருக்கிறது.

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரது வாகன அணியை பலாலி முகாம் பகுதிக்குள் செல்வதற்கு சிறிலங்கா இராணுவத்தினர் அனுமதி மறுத்ததைத் தொடர்ந்து இவர்களுடன் சென்ற மேற்படி ஐக்கிய நாடுகள்சபை அதிகாரிகளும் கொழும்பு செல்ல முடியவில்லை. இதனால் இவர்களது பயணம் பிற்போடப்பட்டிருக்கிறது (75)

## உணவுப் பொருள்கள் ஏற்ற இராணுவம் தடைவிதிப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் துறைக்குச் சென்ற உணவு வாகனத் தொடரணி உள்ளே செல்வதற்கு சிறிலங்கா இராணுவத்தினர் முற்றாக மறுத்துவிட்டனர்.

நேற்று காலை சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளுடன் காங்கேசன்துறை துறைமுகப் பகுதிக்கு உணவு எடுத்து வருவதற்காகச் சென்ற வாகன அணியை துறைமுக களஞ்சியப் பகுதிக்கு செல்வதற்கு அனுமதிக்கப்படவில்லை இதனால் இவ் வாகன அணி திரும்பி வந்து விட்டது.

மீண்டும் உணவு எடுப்பதற்காக துறைமுகப் பகுதிக்கு எப்பொழுது செல்வது என்பது பற்றி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை. (75)

## மட்டு. படகு விபத்தில் பலியாகியோர் விபரம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மண்முனைத் துறையிலிருந்து கொக்கட்டிச்சோலைக்குச் சென்றுகொண்டிருந்த படகு கவிழ்ந்ததனால் பலியாகியோரில் ஒன்பது பேரின் பெயர் விபரங்கள் கிடைத்துள்ளன.

வேலுப்பிள்ளைசந்திரகுமார் (வயது 26, முதலைக்குடா), கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்தவர்களான பாலிப்போடி கேதாரராஜ் (வயது18). மாணிக்கப்போடி மகேஸ்வரி (வயது 40). குமாரசிங்கம் கமலா (வயது 32), முருகமூர்த்தி சுகந்தினி (வயது 10), முருகமூர்த்தி ஜெயந்தினி (வயது 08), குமாரசிங்கம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## பாராளு. தெரிவுக்குழுவை மீண்டும் கூட்ட முயற்சி

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான வழிவகைகளை ஆராயும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவை மீண்டும் விரைவில் கூட்டுவது தொடர்பான முயற்சிகளில் சபாநாயகர் எம். எச். முகமது ஈடுபட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தெரிவுக்குழுவின் தலைவரான சு. கட்சி எம். பி மங்கள முனசிங்காவை இது தொடர்பாக அழைத்து சபாநாயகர் பேசியதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## தமிழர் தேசிய இயக்கத் தலைவர் நெடுமாறன் கண்டனம்

"விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தடை செய்ததன் மூலம் ஒட்டுமொத்தமாக தமிழர்கள் மீது இந்திய அரசு போர்ப் பிரகடனம் செய்துள்ளது பொய்யான குற்றச்சாட்டுகள் மீது இந்தத் தடை விதிக்கப்பட்டுள்ளது" இவ்வாறு தமிழர் தேசிய இயக்கத் தலைவர் ப. நெடுமாறன் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு இந்திய மத்திய அரசு தடை விதித்திருப்பது குறித்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

தமிழ்த்தேசிய மீட்புப்படை என்ற பெயரில் சில இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுத்து தமிழ் நாட்டைப்பிரிக்க விடுதலைப் புலிகள் சதி செய்தனர் என்ற குற்றச் சாட்டு நகைப்பிற்கிடமானதாகும்.

விடுதலைப்புலிகள் தமிழ் நாட்டில் பகிரங்கமாக இயங்கி, பயிற்சி முகாம்களை நடாத்திய பல்லாயிரக் கணக்கான தமிழ் ஈழ இளைஞர்களுக்குப் பயிற்சி கொடுத்த காலகட்டத்தில் அதில்சேர விரும்பிய தமிழ் நாட்டு இளைஞர்களை சேர்க்க மறுத்துவிட்டனர்.

தமிழக அரசியலிலோ இந்திய அரசியலிலோ அவர்கள் தலையிட்டதில்லை.

வரதராசப் பெருமாள் போன்ற எட்டப்பர்களை ஊக்குவித்து அக் கூட்டத்திற்கு ஆயுதங்களைக் கொடுத்து விடுதலைப் புலிகளை கொலை செய்யுமாறு ஈழத்திற்கு அனுப்பிய இந்திய அரசு விடுதலைப் புலிகள்இந்தியாவில்சீர்குலைவு நடவடிக்கையில் ஈடுபடுகிறார்கள் என்று கூறுவது அபத்தமானதாகும்.

இந்திய இராணுவத்தை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வீரச்சாவு

### லெப். தமிழ்மன்னன்



மூதூர் பச்சைநூர் பகுதியில் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் விழுப்புண் அடைந்து சிகிச்சை பெற்று வந்த விடுதலைப் புலிகள் போராளி லெப்டினன்ட் தமிழ் மன்னன் (மாதவராசா-ரெட்ணம் சந்திரகுமார், மூதூர், திருமலை)நேற்று வீரச்சாவை தழுவிக் கொண்டார்.

இவருக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

### வீரவேங்கை இதயதீபன்

மட்டக்களப்பில் கடந்த ஞாயிற்றுக்கிழமை ஏற்பட்ட வெடி விபத்தில் விடுதலைப் புலிகள் போராளி வீரவேங்கை இதயதீபன் (பரீத-ஏகாம்பரம் லிங்கநாதன் குருமண்வெளி மட்டக்களப்பு) வீரச்சாவைத் தழுவிக்கொண்டார்.

இவருக்குதமிழீழவிடுதலைப் புலிகள் தமது வீரவணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

## புலிகள் மீதான தடை அரைவேக்காடுத்தனமானது - ராமதாஸ்

(சென்னை)

புலிகளைத் தமிழ் நாட்டில் தடை செய்வது என்ற மத்திய அரசின் தீர்மானம் அரைவேக்காடுத்தனமானது என்று பாட்டாளி மக்கள் கட்சித் தலைவரான டாக்டர் ராமதாஸ் தெரிவித்தார்.

முன்னதாக புலிகள் மீது மத்திய அரசு தடை விதிக்குமானால் அதற்கெதிரான போராட்டத்தை தனது கட்சி முன்னின்று நடத்தும் என அவர் தெரிவித்தார்.

புலிகளுக்கு ஆதரவாக தான் ஜனநாயக ரீதியான போராட்டங்களை நடத்தப் போவதாகவும் அவர் தெரிவித்திருந்தார்.

## புலிகள் மீதான தடைக்கு வாசுதேவா கண்டனம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் மீது இந்திய அரசு தடை விதித்திருப்பது குறித்து நவசமசமாஜக் கட்சி இந்தியாவைக் குறைகூறியுள்ளது.

சிறிலங்காவின் உள்நாட்டு விவகாரங்களில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டக் கருதி புலிகளை ஊக்கிவளர்த்த இந்தியா, தனது நோக்கம் புலிகளால் நிறைவேறாது என்று தெரிந்ததும் புலிகள் மீது தடை விதித்துள்ளது. சிறிலங்கா அரசின் திறமையின்மையும், தடுமாற்றமுமே இனப்பிரச்சினை தீராமல் இருப்பதற்குக் காரணமென நவசமசமாஜக் கட்சி கூறியுள்ளது.

## சிறுமி மீது சித்திரவதை எஜமானி கைது

(யாழ்ப்பாணம்)

கொழும்புத்துறையிலுள்ள வீடு ஒன்றில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்த பன்னிரண்டு வயதுச் சிறுமி மீது கொடூர சித்திரவதை புரிந்த எஜமானி காவல்துறையினரால் கைது செய்யப்பட்டிருக்கின்றார்.

மணியந்தோட்டத்தைச் சேர்ந்த இச்சிறுமி கொழும்புத்துறையிலுள்ள மேற்படி எஜமானியின் வீட்டில் வேலைக்கு அமர்த்தப்பட்டிருந்தார். இவர்மீது வீட்டின் எஜமானி நீண்ட நாட்களாக கொடூர சித்திரவதை புரிந்துவந்ததாக

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்


### தவறி விட்டது

5'2312080 V என்னும் இலக்கத்தையுடைய இலட்சுமணன் ஓங்கரா மூர்த்தி என்பவரது அடைய ள அட்டை 22 / 05 / 1992 அன்று யாழ். இந்து மைதானத்தை அண்டிய பகுதிக்குள் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் 29/1 கடைச்சாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு சேர்ப்பிக்கவும், சன்மானம் வழங்கப்படும். (சி/ 4459)


### உதைபந்தாட்டப் போட்டி

உரும்பராய், ஒஸ்கா விளையாட்டுக் கழகம் லீக் ஆதரவுடன் நடாத்தும் உதைபந்தாட்டப்போட்டியில் மோதும் அணிகள் சென் அன்டனீஸ் அணியைஎதிர்த்துபாடுமீன்(B) அணிமோதும் அரியாலை ஐ. வி. க. அணியை எதிர்த்து கலைவாணி அணி மோதும். 'இவ்வாட்டம்' கோண்டாவில் குமரன் மைதானத்தில் 27 - 05 - 1992 புதன்கிழமை பி. ப. 3. 30 மணிக்கு நடைபெறும். (2601)

# வடபகுதியிலிருந்து வெளியேறிய
# ஆசிரியர்கள் அனைவரையும் கடமையேற்க அமைச்சு பணிப்பு

[யாழ்ப்பாணம்]

வடபகுதியில் இருந்து இராணுவ நடவடிக்கை காரணமாக வெளியேறிய ஆசிரியர்கள் உடனடியாக மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்லும்படி அவசர பணிப்புரை வழங்கப்பட்டிருக்கிறது

வடபகுதியில் இராணுவ நடவடிக்கையைக் காரணம் காட்டி கணிசமான ஆசிரியர்கள் வெளியேறியுள்ளனர். இவர்கள் வேறு மாவட்டங்களில் தற்பொழுது தற்காலிகமாகக் கடமையாற்றி வருகின்றனர். இதனால் வடபகுதியில் உள்ள பாடசாலைகளில் ஆசிரியர்களுக்குப் பற்றாக்குறை ஏற்பட்டிருக்கிறது

கடந்த வாரம் கொழும்பில் நடைபெற்ற விசேட புனர்வாழ்வு தொடர்பான கூட்டத்தில் மேற்படி விடயம் பிரஸ்தாபிக்கப்பட்டது இதைத் தொடர்ந்து மேற்படி முடிவு எடுக்கப்பட்டதுடன் இம் முடிவை உடனடியாக நடைமுறைப்படுத்தும்படி வடக்குக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் பிரதம செயலாளருக்கு அவசர உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது

அதேவேளை மேற்படி ஆசிரியர்களுக்கு இதுவரை கடமை புரிந்த இடங்களில் வழங்கப்பட்டு வந்த ஆயிரம் ரூபா சம்பளத்தையும் உடனடியாக நிறுத்தும்படியும் பணிப்புரை வழங்கப்பட்டிருக்கிறது. மீண்டும் தமது சொந்த இடங்களுக்குத் திரும்பத் தவறும் ஆசிரியர்களது பதவி பறிக்கப்படுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது. [க] [ச]

## கலந்துரையாடல்

யாழ் மாவட்டத்தில் சேவையில் ஈடுபடும் சகல சிற்றூர்தி உரிமையாளர்கள், சாரதி நடத்துனர்களின் மாவட்டரீதியிலான ஓர் கலந்துரையாடல் இன்று 27-05-92 புதன்கிழமை மாலை 3·00 மணிக்கு முத்திரைச் சந்தி, சாதனா பாடசாலையில் நடைபெறவுள்ளது.

## பாலர் பாடசாலைக்கு உபகரணம இலவசம்

(பருத்தித்துறை)

யாழ். மாவட்டததிலுள்ள உள்ளூராட்சி மன்றங்களின்தும், சன சமூக நிலையங்களினதும் பாலர் பாடசாலைகளுக்கு யாழ். உள்ளூராட்சித் திணைக்களம் கற்பித்தல் உபகரணங்களை இலவசமாக வழங்கவுள்ளது.

இம்மாதம் 31 ஆம் திகதி (31 - 05 - 1992) யாழ் இந்துக்கல் லூரிகுமாரசுவாமி மணடபத்தில பாலர் பாடசாலை ஆசிரியைகளுக்கான கூட்டமொன்று நடைபெறுமென்றும், இக்கூட்டத்தில் பாலர் பாடசாலைகளுக்கான கற்பித்தல் உபகரணங்கள் இலவசமாக வழங்கபபடுமென்றும் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளா திரு. சு. டிவகலால அறிவித்துள்ளார். (25)

## வடக்கிற்கு மின் விநியோகம் ஒரு ஏமாற்றுத்திட்டம்

(நமது நிருபர்)

உதவி வழங்கும் நாடுகளை ஏமாற்றும் திட்டமே வடபகுதிக்கான மின் விநியோகத் திட்டம் என கொழும்பிலிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த இரண்டு வருடங்களாக வடபகுதிக்கான மின் விநியோகம் சிறிலங்கா இராணுவததினரின் உதவியுடன் அரசினால் தடை செய்யப்பட்டுள்ளது தெரிந்ததே.

யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இங்கு பதவி ஏற்ற காலம் முதல் வடபகுதிக்கான மின்சார விநியோகத்தை வழங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பலதடவைகள் தொடர்பு கொண்டிருந்த போதும் அது இன்று வரை பலனளிக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக அரச அதிபர் கடந்த வருட இறுதியில்கூட்டுப்படைத்தலைமையகத்துடன் தொடர்பு கொண்டபோது மின் மாற்றிகளை கப்பல் மூலம் அனுப்பி வைக்குமாறும் அவ்வாறு அனுப்பிவைக்கப்படின் அவற்றில் ஒயில் நிரப்பப்பட்டு மீண்டும் யாழ் நகருக்கு அனுப்பிவைக்கப்படும் என பதிலளிக்கப்பட்டதுடன் கிளிநொச்சி வரை திருத்தவேலைகளும் மேற்கொள்ளப்பட்டன. இதனை அடுத்து கடந்த மாதம் சில மின் மாற்றிகள் கப்பல் மூலம திருமலைக்கு அனுப்பிவைக்கப்பட்டன.

ஆனால் தற்போதைக்கு வடபகுதிக்கான மின்சார விநியோகம் மேற்கொள்ளும் திட்டம் அரசிற்குக் கிடையாது எனவும் இம் மின்விநியோகத்திட்டத்தை முன்வைத்து உலக நாடுகளிடம் இருந்து கூடியளவில் நிதி உதவிகளைப பெற்று அந் நிதியினை பாதுகாப்புச் செலவினங்களுக்குப் பயன் படுத்துவதே இவர்களின் நோக்கம் எனவும் அச் செய்திகள் மேலும் தெரிவிக்கின்றன.

## லங்கா சீமெந்து சம்பள கொடுப்பனவு

லங்கா சீமெந்து ஊழியர்களின் மே மாதததிற்கான 25 விகிதச் சம்பளக் கொடுப்பனவுகள் சுன்னாகத்தில் உள்ள தற்காலிக அலுவலகத்தில் நாளை 28 ஆம் திகதி வியாழக் கிழமை தொடக்கம் வழங்கடபடும்.

அத்துடன் குடிசார் பகுதி வைத்திய நிலையம், பிரதான களஞ்சியப்பகுதி, மின்சாரப் பகுதி, பாதுகாப்புப்பகுதி ஊழியர்களுக்கு அடுத்த மாதம் 7 ஆம் திகதி தொழிற்சாலை வேலைகளை மீள ஆரம்பிபபதற்கான அறிவுறுத்தல் கடிதமும் கொடுக்கபபடும் என லங்கா சீமெந்து தொழிற்சாலை உதவிப பொது முகாமையாளர் தெரிவித்துள்ளார். (பா)


## வெற்றுப் போத்தல், மூடி கொள்வனவு

வெற்று போத்தல்கள், சாராயப்போத்தல் மூடிகள் சேகரித்து விற்பனை செய்பவர்கள் கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

வடமாகாண தெங்கு பனம்பொருள் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச, சந்தைப்படுத்தும் பகுதி,
222, அர்ச்சுனா வீதி(ஸ்ரான்லி வீதி)
யாழ்ப்பாணம்
(சி4462)



## வைத்தியர்கள், வைத்திய மாணவர்களுக்கோர் அரிய சந்தர்ப்பம்

திறந்த சர்வதேச பல்கலைக் கழகத்துடன் இணைந்து வட இலங்கை ஹோமியோபதி சங்கமும் வட இலங்கை அக்குபஞ்சர் சங்கமும் நடாத்தும் வகுப்புக்களில் சேர விரும்புபவர்கள் 31-05-92 ஆம் திகதிக்கு முன் காரியாலயத்தில் நேரில் தொடர்பு கொள்ளவும்.

குறிப்பு:- பயிற்சியின் முடிவில் திறந்த சர்வதேசப் பல்கலைக் கழகத்தால் வழங்கப்படும் ( D. Ac.) ( M. F. HOM ) சான்றிதழ்கள் வழங்கப்படும்.

சங்க வெளியீடுகளான - பயோகெமிஸ்றி, மெட்டீறியா மெடிக்கா – ஹோமியோபதி தத்துவம் [ஆர்கனான்] எனும் புத்தகங்கள் சங்கக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விபரங்களுக்கு:

பதிவாளர், வட இலங்கை ஹோமியோபதி சங்கம். | பதிவாளர், வட இலங்கை அக்குபஞ்சர் சங்கம்.

35, ஐந்துசந்தி, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

(2602)


## வவுனியாவில் டெங்கு காய்ச்சல்

(வவுனியா)

வவுனியா மாவட்டத்தில் பலருக்கு டெங்குக் காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. வைத்திய வசதி அற்ற நிலையில் இந் நோய்க்குள்ளான நோயாளர்கள் பெரிதும் பாதிப்படைந்துள்ளனர்.

வவுனியா மாவட்டத்தில் கிராமப் புறங்களில் இக்காய்ச்சலுக்குள்ளானவர்களே சிகிச்சை பெற முடியாத நிலையில் தவிக்கின்றனர்.

பலர் தனியார் மருத்துவ நிலையங்களில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (தி)


# நினைவு கூருகின்றோம்---
# 1992-05-27

1982 ஆம் ஆண்டு இதேதினத்தில் தெல்லிப்பளையில் தேசவிரோத சக்திகளினால் படுகொலை செய்யப்பட்ட நாட்டுப்பற்றாளர்களான

**பரநிருபசிங்கம் இறைகுமாரன்** [அளவெட்டி]
**சிவபாலசிங்கம் உமைகுமாரன்** (அளவெட்டி)

1985 ஆம் ஆண்டு பேருந்தில் பயணம்செய்துகொண்டிருக்கையில அனுராதபுரம - புத்தளம வீதியில் சிறிலங்காப் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டு உயிருடன் எரிக்கப்பட்ட 2 தமிழர்கள்.

1987 ஆம் ஆண்டு சிறிலங்காப் படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சில் வீரச்சாவெய்திய -

**முரளி** (நவரத்தினம் ஜெயக்குமார் - 894, செல்வநாயகபுரம், திருகோணமலை)

இதே ஆண்டு வீரச்சாவெய்திய -

**கசண்** (முத்தையன்கட்டு)

வடமராட்சியில் சிறிலங்காப் படையினர் 2 ஆவது நாளாக மேற்கொண்ட 'ஒறேசன் லிபறேசன்' நடவடிக்கையின் போது தொண்டமானாற்றுப் பகுதியில் இராணுவத்தினருடன் ஏற்பட்ட மோதலில் வீரச்சாவெய்திய -

**தாசன்** (இராசையா உதயகுமார் - கற்சிலைமடு, ஒட்டுசுட்டான், முல்லைத்தீவு)

இதே நடவடிக்கையின் போது வல்வெட்டித்துறையில் இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத் தாக்குதலில வீரச்சாவெய்திய -

**2 ஆம் லெப். யூசி** (செல்லச்சாமி பிறேமானந்தன் - யூசிவீதி, மானாங்கானை, வல்வெட்டித்துறை)

இதே நடவடிக்கையின் போது கம்பர்மலையில் படையினர் மேற்கொண்ட விமானக்குண்டு வீச்சில் கொல்லப்பட்ட 27 தமிழர்கள்.

தெல்லிப்பளையில் சிறிலங்கா இராணுவத்தினர் 'அம்புலன்ஸ்' வண்டி ஒன்றின்மீது மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட 2 தமிழர்கள்.

மண்டைதீவு முகாமிலிருந்து. குருநகர் சென். ஜேம்ஸ் பாடசாலை மீது சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட எறிகணைத்தாக்குதலில் கொல்லப்பட்ட 6 தமிழர்கள்.

1988 ஆம் ஆண்டு வீரச்சாவெய்திய -

**விஜி** (திருக்கோணமலை)

அம்பாறை, காரைதீவுப் பகுதியில் இந்தியப் படையினரால் கைது செய்யப்பட்டு தேசவிரோத சக்திகளினால் அடித்துக்கொலை செய்யப்பட்ட -

**றொசான்** (உலகசேகரம் பத்மநாதன் - சல்லித்தீவு, காரைதீவு - 02, அம்பாறை)

அம்பாறை, காரைதீவுப் பகுதியில் தேசவிரோத சக்திகளுடனான மோதலின் போது சயனைட உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**நேசன்** (காரைதீவு, அம்பாறை)

சங்கத்தானை, சப்பச்சிப் பகுதியில் இந்தியப்படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

**புறொப்ளர்** (சிவயோகராசா குணராசா - கச்சாய் தெற்கு, கொடிகாமம்)

1989 ஆம் ஆண்டு முல்லைத்தீவு/ புதுக்குடியிருப்பு, தேவிபுரம்பகுதியில் இந்தியப் படையினர் சுற்றிவளைத்து மேற்கொண்ட துப்பாக்கிச் சூட்டில் விழுப்புண் அடைந்த நிலையில் சயனைட் உடகொண்டு வீரச்சாவெய்திய -

**செந்தூரன்** (உமாபதி சத்தியகுமார் - நீராவியடி யாழ்ப்பாணம்)

மட்டக்களப்பு, ஆரையம்பதிப் பகுதியில் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்ட பிரஜைகள் குழுத் தலைவர்;

**ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்**

**தமிழீழ விடுதலைப் புலிகள்**

(சி/4456)

# புலனாய்வுத் தகவல்களால்தான் ஆயுதங்களின் திறமை புலப்பட்டது

அமெரிக்க மத்திய புலனாய்வு ஏஜென்சியான சி.ஐ ஏ யின் இயக்குநர் ரோபட் கேட்ஸ் வாஷிங்டன் டைம்ஸ் பத்திரிகைக்கு அளித்த செவ்வியிலிருந்து சில பகுதிகளை இங்கே தருகிறோம். இதில் இன்னும் ஒழித்து வைக்கப்பட்டிருக்கும் சதாம் குசையின் ஸ்கட் ஏவுகணைகள், முன்னாள் சோவியத் யூனியனின் உறவு அமைப்பான கே. ஜீ பி. யின் புதிய இலக்குகள் என்பன பற்றி அவர் பேசுகிறார்.

கேள்வி:-
ஜெனரல் நோர்மன்சுவாஸ்கோப் அமெரிக்கக் காங்கிரஸுக்கு வளைகுடாப் போர்க் காலத்தில் கிடைத்த புலனாய்வுத் தகவல்களின் தரத்திற்கு எதிராக கடுமையான முறைப்பாடு செய்துள்ளார்.

பதில்:-
பாலைவனப் புயல் காலத்தில் மிக முக்கிய புலனாய்வு வெற்றிகள் சில ஏற்பட்டன. புலனாய்வுதான், திறமையான ஆயுதங்களை இன்னும் திறமையாக்கின. புலனாய்வுதான் தடைகளைக் கண்காணிப்பதற்கு உதவின. புலனாய்வுதான் ஈராக்கிய 42 படைப் பிரிவுகளும் எங்கு நிற்கின்றன என்பதைத் தளபதிகளுக்கு விளக்கின. அத்துடன் எவ்வித் தளபாடங்கள் இருந்தன என்பதையும், தொழில்நுட்ப ஆச்சரியங்கள் எதுவும் இல்லையென்பதையும் அறிந்துகொள்வதற்குப் புலனாய்வு உதவிற்று.

கேள்வி:-
ஈராக்கின் அணுவாயுத, இரசாயன பயமுறுத்தல்களின் பரிமாணங்களை இனங்கண்டு கொள்வதற்குப் புலனாய்வு தவறிவிட்டதே?

பதில்:-
அணுவாயுதங்கள் நுண்மங்கள் ஆகியவற்றின் நிகழ்வுகளை இனங்கண்டு கொள்வதற்கு எமது அமைப்பு திறமையாக இயங்கிற்று. அவற்றின் தகவல் தெரியாதிருந்தது, அவற்றின் அளவிலும் வேகத்திலும்தான். உதாரணமாக அணுவாயுத சம்பந்தமாக.

கேள்வி:-
பெருமளவிலா?

பதில்:-
குறிப்பிடக் கூடிய அளவு என்பதை ஒத்துக்கொள்கிறோம். சதாம் குசேயின் அணுவாயுத தொழிற் கூடங்களை வைத்திருந்தார் என்றும், மையத்திலிருந்து புறநோக்கிச் செல்லும் விண்மத்தின் யூரேனிய செயற்பாட்டுத் திறன் பற்றிய தன்மையும் எமக்குத் தெரியும். ஆனால் அவர்களின் கொலுறன் [ Colutron ] வளர்ச்சியை நாம் கண்டுபிடிக்கவில்லை.

கேள்வி:-
ஈராக்கிய பயமுறுத்தல் எவ்வாறு இருக்கின்றது?

பதில்:-
அவர் சிலநூறு ஸ்கட் (Scud) ஏவுகணைகளை மறைத்து வைத்திருக்கிறார் என்று எண்ணுகிறோம். அவரது அணுவாயுத உற்பத்தி முயற்சிகள் கண்டு பிடிக்கப்பட்டு வெளிக்கொணரப்பட்டது. அதனால் அவற்றைக் குறிப்பிடப்பட்ட அளவுக்கு மீள இயங்க வைப்பதற்குப் பல ஆண்டுகள் செல்லும் என்று மதிப்பிடுகிறோம். அவருடைய நுண்ம ஆயுதங்கள் சில வாரங்களில் திரும்ப இயக்கப்படலாம்.

கேள்வி:-
சதாம் தூக்கியெறியப்பட்டால் என்ன நடக்கும்?

பதில்:-
அதன்பின் ஏற்படும் ஆட்சியாளரின் தன்மையை பொறுத்தது அது. அவரின் வாரிசு நிச்சயமாக அவரளவு பலம் வாய்ந்தவராக இருக்க முடியாது. பயமுறுத்தல், அச்சம் ஆகியவற்றின் அடிப்படையில் ஓர் ஆட்சியைக் கட்டி எழுப்புவதற்கு 20 ஆண்டு கால நேரமும் இராது. நிச்சயமாக சதாம் கூட போர் தொடங்கிய காலத்தில் இருந்தளவு இப்போது பலம் வாய்ந்தவராக இல்லை. குறையாத ஆனால் வளர்ந்துவரும் பலசிக்கல்கள் அவருக்கு உண்டு.

கேள்வி; ஈராக் நிலை என்ன?

பதில்:-
பாரசீகக்குடாவில் தனது முன்னைய தன்னிகரற்ற நிலையை திரும்பவும் பெறுவதற்கு உறுதியாக இருக்கின்றது. மிக் 29 (Mig 29) சூ 24 (Su 24) போரிடும் குண்டு வீச்சு வானூர்திகளிலிருந்து வருடத்திற்கு கிலோ வகுப்பு (Kilo Class) தாக்கும் நீர் - மூழ்கிகள் இரண்டுவரை ஆகிய - இவையெல்லாம் ருசியாவிலிருந்து பெற்றவை - மிகுந்த தொழில்நுட்பம் வாய்ந்த ஆயுதங்களைப் பெறுவதற்கு ஆண்டிற்கு 2 பில்லியன் அமெரிக்க டாலர் செலவிடுகிறார்கள். அவர்களிடம் ஓர் கரடுமுரடான இரசாயன ஆயுத திட்டம் இருக்கின்றது. அத்துடன் நுண்மபோராயுத திட்டமும் அவர்களிடம் இருக்குமென சந்தேகிக்கிறோம். ஈரானியர் தொடர்ந்து பயங்கரவாதத்திலும் ஈடுபடுகிறார்கள். கடந்த சில வாரங்களில் கிஸ்புல்லவுக்கு பெருந்தொகையான ஆயுதங்களை அனுப்பியுள்ளனர் என்றும் எமக்கு தெரியும்.

கேள்வி:-
நீங்கள் வடகொரியாவின் பயமுறுத்தல்பற்றி அடிக்கடி கூறுகிறீர்கள்?

பதில்:-
இதில் மையப்பொருள் அணுவாயுதம் பற்றியது. அவர்கள் எவ்வளவு புளுட்டோனியத்தை செலவான அணு உலை எரிபொருளிலிருந்து பிரித்தெடுக்கிறார்கள் என்பதும் எங்களுக்குத் தெரியாது. ஆனால் அவர்களுக்கு தேவையான புளுட்டோனியம் கிடைத்துவிட்டால் சில மாதங்களிலிருந்து இரண்டு ஆண்டு காலகட்டத்துள் அவர்கள் ஒரு ஆயுதத்தைப் பெற்றுக் கொள்ளலாம். அவர்கள் அணு ஆயுதத்தகைமையை அடைவதற்கு அண்மித்துக் கொண்டிருக்கிறார்கள்.

கேள்வி:-
தொழில் நுட்ப ரகசியங்களைப் பற்றி தகவல் எடுப்பது கே. ஜீ.பி செய்வதுபோன்றவேலை அல்லவா?

பதில்:-
கே. ஜீ. பி. இல்லாமல் போயிருக்கலாம். ஆனால் மேற்கத்திய தொழில் நுட்பத்தின் மீது ருசிய புலனாய்வு சேவையின் ஈடுபாடு தொடர்ந்து இருக்கும். நாங்கள் அவர்களின் நடவடிக்கைகள் ஆட்சேர்ப்பு முயற்சிகள் ஆகியவற்றை காணுகிறோம். அவர்களின் வளங்கள் குறைந்துள்ள போதும் முன்பை விட அதிக கூர்மையாக செயலாற்றுகிறார்கள். உண்மையில் (GRU) ஜீ. ஆர். யு. என்ற இராணுவ புலனாய்வுதொழில்நுட்ப இரகசியங்களை அறிவதில் மிக தீவிரமாக இயங்குகிறது.

கேள்வி:-
முன்னைய குடியரசுகளில் எவையாவது வேவுபார்ப்பதில் இறங்கியுள்ளனவா?

பதில்:-
என் கவனத்திற்கு அப்படியொன்றும் வரவில்லை.

## 15 வயதுப் பெண்ணிற்கு ஒரே சூலில் 4 குழந்தைகள்

அமெரிக்காவைச் சேர்ந்த 15 வயது சிறுமி நான்கு குழந்தைகளுக்குத் தாயானாள். தனது 21 வயதுக் கணவனுடன் தற்பொழுது புளோரிடா மாநிலத்தில் சிறிய வீடு ஒன்றில் வாழ்ந்துவரும் இவர்கள் அரசின் உதவியுடனும், உதவி வழங்கும் நிறுவனங்களின் உதவியுடனும் தமது வாழ்க்கையை நடத்தி வருகின்றார்கள்.

ஆரம்பத்தில் ஒரு குழந்தையே சூலில் இருப்பதாக டாக்டர்கள் தெரிவித்தார்கள். இறுதி நேரத்தில் நான்கு குழந்தைகள் எனக் கண்டுபிடிக்கப்பட்டுத் தாயாருக்குத் தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டது. முதல் இரு குழந்தைகளும் சுகப் பிரசவமாக இருந்தது. பின்னர் இரு குழந்தைகளும் சத்திரசிகிச்சை மூலம் எடுக்கப்பட்டன. இதேவேளை, முதல் குழந்தை மட்டும் சரியான நிறையிலும், ஏனைய மூன்று குழந்தைகளும் குறைந்த நிறையிலும் இருந்தன.

தற்பொழுது நான்கு குழந்தைகளும் சுகமாகத் தாயாருடன் உள்ளனர். தாயார் தனது நான்கு பிள்ளைகளையும் கவனிப்பதிலேயே தனது முழு நேரத்தையும் செலவிடுகின்றார்.

## தாய்லாந்தில் துப்பாக்கிச் சூடு; உத்தரவிட்ட அதிகாரியை விசாரிக்க வேண்டும்

(பாங்கொக்)

தாய்லாந்தில் கலகத்தை அடக்க துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொள்ளுமாறு துருப்புகளுக்கு அறிவித்தல் விடுத்த ஜெனரல் சுசிண்டா விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என ஜனநாயக குழுக்கள் கோரிக்கை விடுத்துள்ளன

தம்முடைய பதவியை ராஜினாமா செய்துவிட்ட ஜெனரல் சுசிண்டாவுக்கு அடுத்தபடியாக பதவியை ஏற்கக் கூடிய ஒரு நபரைப்பற்றி அரசியல் கட்சிகள் தற்போது விவாதிக்கத் தொடங்கியுள்ளன.

இதேவேளை தேர்ந்தெடுக்கப்படாத மனிதர் எவருமே தாய்லாந்து பிரதமராக வர முடியாது என்பதைப்பற்றிய அரசியல் சாசன திருத்தம் ஒன்றை விவாதிக்க தாய்லாந்து பாராளுமன்றம் நேற்று முன்தினம்கூடியதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## மரணம் அடைவதற்கு நீதிமன்றம் அனுமதி

மொன்றியல்)

மரணத்துக்கு அனுமதி கோரி ஒரு பெண் நீதிமன்றத்துக்குச் சென்றார். அவருக்கு அம்மரணத்துக்கு அனுமதி அளித்து நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் கனடா நாட்டிலுள்ள கியூபெக் நகரில் இடம் பெற்றது.

அங்கு 24 வயதான நான்சி என்ற பெண்ணுக்கு பக்கவாதம் ஏற்பட்டது கடந்த இரு ஆண்டுகளாக படுத்த படுக்கையாக வேதனைப்பட்டார். இதனையடுத்து அவருக்கு மரணம் அடைய அனுமதி கோரி நீதிமன்றில் மனுச் செய்தார் அதற்கு அனுமதி அளித்து நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

## விரைவில் இடைக்கால அரசு?

(டில்லி)

தென்னாபிரிக்காவில் இடைக்கால அரசு அமைப்பதற்கான பேச்சுவார்த்தைகள் விரைவில் தொடங்கும் எனவும் பெரும்பான்மையினரான கறுப்பர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசு விரைவில் அமைக்கப்படும் எனவும் இந்தியவெளியுறவுத்துறை இணை அமைச்சர் எட்வார்ட் பெலய்ரோ நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் ஆபிரிக்க தினத்தை குறிக்கும் வகையில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர் ஜனநாயக தென்னாபிரிக்காவிற்கான மாநாடு இடைக்கால அரசமைப்பதான பிரச்சினையில் தீர்வு ஒன்றை காணாமலே முடிந்தது பற்றி இந்தியா வருத்தம் தெரிவிப்பதாகவும் கூறினார்.

இதே வேளையில் தென்னாபிரிக்காவில் வரட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இந்தியா பாலுணவுப் பொருள்களையும், மருந்துப் பொருள்களையும் அனுப்பி வைக்கும் எனவும் அவர் தெரிவித்தார்.

## பொருளாதாரத் தடை தொடர வேண்டும்

- நெல்சன் மண்டேலா

தென்னாபிரிக்காவில் பல இனத்தவர்கள் பங்கு கொள்ளும் வகையில் அமைவதான இடைக்கால அரசாங்கம் ஒன்றிற்கு இப்போதுள்ள ஆட்சியினர் இணக்கம் தெரிவிக்கும் வரை இந்நாட்டிற்கு ஏற்படுத்தப்படும் சர்வதேச தடை நடவடிக்கைகள் தொடர்ந்திருக்க வேண்டும் என ஆபிரிக்க காங்கிரஸ் தலைவர் நெல்சன் மண்டேலா மீண்டும் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டார்

## பாலஸ்தீனிய காஸாப்பகுதி தடை செய்யப்பட்டது

[டெல்அவிவ்]

பாலஸ்தீனிய காஸா நிலப் பகுதிகள் கடந்ததிங்கள் முதல் மூன்று நாட்களுக்குத் தடை செய்யப்பட்ட பகுதிகளாக இஸ்ரேலிய அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் அறிவிப்பை அடுத்து 30,000 அரபுகள் அப்பகுதிகளில் பணிபுரிவதில் இருந்து தடை செய்யப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஞாயிறு இஸ்ரேலிய பாடசாலை மாணவி ஒருத்தி கொலை செய்யப்பட்டதனை அடுத்து இஸ்ரேலிய பாதுகாப்பு அமைச்சர் திரு. மூர்சீஎரிஷானும், பொலிஸ் அதிகாரிகளும் சந்தித்து கலந்தாலோசித்த பின்னரே இம் முடிவு எடுக்கப்பட்டதாகத் தெரியவருகிறது

இதனிடையே மேற்காசிய அமைதித் திட்டத்திற்கு அண்மையில் நடந்த இஸ்ரேலியத் தாக்குதல்கள் ஓர் அச்சுறுத்தலாகவே உள்ளது என இஸ்லாமிய மாநாட்டு நிறுவனம் கண்டனம் செய்துள்ள அதே வேளை ஆக்கிரமிக்கப்பட்ட பகுதிகளில் மீண்டும் மூண்ட சண்டையில் நான்கு பேர் கொல்லப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

## முஸ்லிம் அகதிகளை திருப்பி அனுப்புவதற்கான பேச்சுவார்த்தை ஆரம்பம்

முஸ்லிம் அகதிகளைதிருப்பி தமது சொந்த இடங்களுக்கு அனுப்புவதற்காக பங்களாதேஷுக்கு மியான்மாருக்கு இடையிலான அதிகாரபூர்வ பேச்சுவார்த்தைகள் நேற்று முன்தினம்மியான்மார் எல்லைப்புற நகரமான மாந்தாவில் நடைபெற்றது.

தற்போது பங்களாதேஷ் அகதி முகாமிலுள்ள சுமார் இரண்டு லட்சத்து அறுபதினாயிரத்துக்கும் அதிகமான முஸ்லிம் அகதிகள் மியான்மாருக்கு திருப்பி அனுப்பப்பட உள்ளனர்.

அகதிகளை திருப்பி அனுப்புவதற்கான நிச்சயமான ஒரு திகதி அன்றைய பேச்சுக்களில் எடுக்கப்பட்டிருக்கலாம் என்று டாக்காவில் அரச வட்டாரங்களில் இருந்து தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக அகதிகளை திருப்பி அனுப்பும் பணி இந்த மாதம் 15ஆம் திகதி தொடங்கப்படுவதாக இருந்தது. நிர்வாகச் சீர்கேடுகள் காரணமாக அதனை அமுல்படுத்த முடியவில்லை என ஒத்திப் போடப்பட்டதும் தெரிந்ததே.

## பிஜியில் பொதுத்தேர்தல்; இந். வம்சாவழி பகிஷ்கரிப்பு

இந்திய வம்சாவழி மக்களுக்குச் சம உரிமை மறுத்து வந்த பிஜித் தீவில் கடந்த சனிக்கிழமைபொதுத் தேர்தல் ஆரம்பித்தது.

இத் தேர்தலை இந்திய வம்சாவழி மக்களின் முக்கிய கட்சிகள் பகிஷ்கரித்துள்ளன.

சுமார் 48 சதவிகிதம் இந்திய வம்சாவழியினரைக் கொண்ட பிஜித் தீவில், பிஜி பூர்வீக மக்களைத் தவிர வேறு யாரும் ஜனாதிபதியாக முடியாதபடி அரசின் சட்டத்தில் இராணுவ அமைப்பு திருத்தி அமைத்திருக்கிறது.

தீவகத்திலிருந்து இடம் பெயர்ந்தவேளை

# பிரிந்த குடும்பங்களை இணைக்கும் திட்டம் நிறைவேற்றப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

மனித நேய அடிப்படையில் உங்களால் ஆரம்பிக்கப்பட்ட குடும்பங்களை மீளவும் ஒன்றிணைக்கும் திட்டம் மக்களுக்குப் பயனளிக்கக் கூடிய முறையில் நிறைவேற்றப்படவில்லை. யாழ்ப்பாணத்திலிருந்து 310 பேரைக் குடும்பங்களுடன் இணைப்பதற்காக நீங்கள் தீவகத்திற்கு அழைத்துச் சென்றீர்கள். பதிலுக்கு 26 பேரை மட்டும் தான் நீங்கள் தீவகத்திலிருந்து யாழ்ப்பாணம் அழைத்து வந்துள்ளீர்கள். ஊர்காவற்றுறையிலும், காரைநகரிலும் பலர் யாழ்பாணம் வந்து தமது குடும்பங்களுடன்சேர்வதற்குத் தவமிருக்கின்றனர். வயோதிபரும், நோயாளரும், பெற்றோரைப் பிரிந்த குழந்தைகளும் யாழ்ப்பாணம்வருவதற்கு கோரியுள்ளனர். அவர்களது கோரிக்கைகள் இதுவரை நிறைவேற்றப்படவில்லை.

இவ்வாறு இடம் பெயர்ந்த தீவக மக்கள் நலன் காக்கும் கழகம் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் யாழ்ப்பாணப் பிரதிநிதியிடம் கையளித்த மகஜரில் குறிப்பிட்டுள்ளது.

மேலும் வைத்திய காரணங்களுக்காக பளாலிமூலம் யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டவர் வருத்தம் குணமடைந்த பிறகும் திரும்பவும் தீவகத்துக்கு அனுப்பப்படாமல் யாழ் போதனா வைத்திய சாலையில் மாதக்கணக்கில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என்றும்,

தீவகமக்களுக்கு குறிப்பாக நெடுந்தீவு மக்களுக்கு வழங்கப்பட்ட இலவச உணவு விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது. அகதி முகாம்களில் இறந்தவர்களின் மரணச்சடங்குக்கு அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்ட நிதி உதவியும் நிறுத்தப்பட்டுள்ளது. இந்த ஜனவரி முதல் மரணச் சடங்குகளுக்கென நீங்கள் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு வழங்கிய நிதி உதவியை நிறுத்தியதால் இந்த நிலை என்றும்,

தீவக அகதிகள் நேரடி நடவடிக்கையில் இறங்க உள்ளனர். அவர்களைத் தணிந்து போகும்படி நாம் கோரியுள்ளோம். ஆகவே தீவிலிருந்து யாழ்ப்பாணம்வரப்பதிவு செய்திருக்கும்96பேரையும் இரண்டு வாரங்களுக்கிடையில் யாழ்ப்பாணம் கொண்டுவரும்படியும் அந்த மகஜரில் கோரப்பட்டுள்ளது. காலம் கடத்தாமல் நடவடிக்கை மேற்கொள்ளும் படியும் அந்த மகஜர் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைக் கோருகிறது.

பாராளுமன்ற உறுப்பினரின்

## அரசியல் செயற்பாட்டிற்கு ஐ.தே.க. தடைவிதிப்பு

[கொழும்பு]

ஆளும் ஐக்கிய தேசியக்கட்சியின் மேல் மாகாணக் கிளை, பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் உட்பட மேல் மாகாண உறுப்பினர்கள் இருவரை அரசியல் நடவடிக்கைகள் எதிலும் ஈடுபடக்கூடாது என்று தடை விதித்துள்ளது. அவர்கள் மீதான ஒழுங்காற்று நடவடிக்கை ஒன்று எடுக்கப்படவிருப்பதாகவும், அதுவரையில் கட்சியின் அரசியல்செயற்பாடுகள் எதிலும் கலந்து கொள்ள வேண்டாம் என்றும் அவர்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

கடந்த பதினெட்டாம்திகதி கட்சிக்கிளைத்தீர்மானமொன்றின் அடிப்படையில் மேற்கு மாகாண சபையின் உறுப்பினர்களானறொபர்ட்பெரேரா இந்திரபாலா ஹேவா விதாரண ஆகியோரும், பாராளுமன்ற உறுப்பினரான சிறிநாத் லாலகா குமாரசிங்காவும் அரசியல் நடவடிக்கைகளில் தடை விதிக்கப்பட்டோராவர்.

பொருள்கள் கொண்டு வரத்தடை

## வவுனியாராணுவம்கெடுபிடி ஒலிபெருக்கிமூலம்அறிவிப்பு

(வவுனியா)

வவுனியா இராணுவமுகாம் படையினர் மீண்டும் கொழும்பிலிருந்து யாழ். வரும் பயணிகளுக்கு ஒலிபெருக்கி மூலம் விசேட அறிவுறுத்தல்கள் வழங்கி வருகின்றனர்.

தடை செய்யப்பட்ட பொருள்களை தமது கட்டளையை மீறி கொண்டு செல்பவர்களுக்கு சிறைத்தண்டனையும், தண்டப்பணமும் அறவிடப்படும் என அறிவித்து வருகின்றனர்.

இதேவேளை பற்றரி, போல்ஸ் கொண்டுவந்த மூன்று யாழ்வாசிகள் இராணுவத்தினரால்பிடிக்கப்பட்டுகொண்டு செல்லப்பட்டனர் என அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. [05]

## செட்டிகுளம் பகுதி மக்கள் மீளச் சென்று குடியமர அச்சம்

செட்டிகுளம் பிரதேசத்திலிருந்து வெளியேறிய தமிழ் அகதி மக்கள் மீளச் சென்று தமது இருப்பிடங்களில் குடியேறுவதற்கு தயக்கம் காட்டுகின்றனர்.

செட்டிகுளம் மக்கள் மீளச் சென்று குடியேறும்படி அரசாங்கம் அறிவித்துள்ள போதிலும் இராணுவ ஆக்கிரமிப்பு வீடுகள் சேதம், சிங்களக் காடையர்களின் அட்டகாசம் ஆகிய காரணங்களினால் இம்மக்கள் மீளக்குடியேறுவதற்கு தயக்கம் தெரிவித்துள்ளனர்.

செட்டிகுளம் பகுதியில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றமும் இராணுவ ஆக்கிரமிப்பும் இடம் பெற்று வருவது தெரிந்ததே.

சிங்கள முஸ்லிம் காடையர்களினால் தமிழ் மக்களின் பல வீடுகள் கொள்ளை அடிக்கப்பட்டமை தெரிந்ததே.

குடியேறிய பின்னர் இராணுவத்தாலும், சிங்கள முஸ்லிம் குண்டர்களினாலும் ஊர்காவல் படையினராலும் தம் உயிருக்கும் உடைமைக்கும்ஆபத்து நேரலாம் என்ற நோக்கத்திலேயே இந்த அகதி மக்கள் மீளக் குடியமர்வதற்கு தயக்கம் காட்டுகின்றனர். (தி)

## மாணவர்களுக்கு சீருடை வழங்கப்படவுள்ளது

அனைத்துப் பாடசாலை மாணவர்களுக்கும் சீருடை வழங்கப்படவுள்ளது.

சகல பாடசாலை மாணவர்களுக்கும்வருடாந்தம்சீருடைப் பொதியை வழங்குவது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்க வரும் ஜூன் 8 ஆம் திகதி கொழும்புஇசுருபாய கட்டடத்தில் கலந்துரையாடல் கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது. இக் கூட்டத்தில் கோட்டக்கல்விப் பணியாளர், பிரதேசக் கல்விப் பணியாளர்கள் மற்றும் மேலதிகக் கல்விப் பணிப்பாளர்களைக் கலந்து கொள்ளுமாறு கல்விச் சேவைகள் அமைச்சின் செயலாளர் க.ஜ. விக்கிரமசிங்கா பணித்துள்ளார்.

## விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் ஊர்காவற்றுறைப் பிரிவினால் தையல் பயிற்சி, பன்ன வேலைப்பயிற்சி என்பவற்றிற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்விண்ணப்பங்கள் 01. 06. 92க்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும் என்றும் விண்ணப்பிப் போரில் தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்தோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (22)

## விபுலானந்த அடிகளாரின் நூற்றாண்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரியின் தமிழ்ப் பேரவையினால் சுவாமி விபுலாந்த அடிகளின் நூற்றாண்டு விழா இன்று புதன்கிழமைவைத்தீஸ்வராக் கல்லூரியின் விவேகானந்த மண்டபத்தில் நடாத்தப்படும்.

இந்நிகழ்வில் விபுலானந்த அடிகளின் ஆராய்ச்சி உதவியாளராக பல்லாண்டு காலம் கடமையாற்றிய திரு. க. சச்சிதானந்தன் அவர்கள் ''நான் கண்ட விபுலானந்தர்'' என்ற தலைப்பிலும், கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை அவர்கள் ''மதங்கசூளாமணி'' என்ற தலைப்பிலும் சொற்பொழிவாற்றுகின்றனர். இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தின் சில முன்னணிப் பாடசாலைகள் இணைந்து ''எங்கும் விபுலானந்தர் என்பதே பேச்சு'' என்ற கருத்தரங்கும் மாணவர்களின்கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

ஆயுதங்களுடன் கைதான

## சுவிஸ் பிரஜையின் மனைவி வேலையிலிருந்து இடை நிறுத்தம்

(கொழும்பு)

ஆயுதக் கடத்தலில் ஈடுபட்ட, சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட சுவிஸ் பிரஜையின் மனைவி, அவர் கடமையாற்றிய வெளிநாட்டு வங்கிக்கிளையிலிருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளார்.

இவர் கடமையாற்றிய வங்கியில் இவர் பற்றிய விசாரணை எதுவும் இன்றுவரை பொலிசாரால் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

திடீர் இறைச்சிக் கடைகளின்

## சட்ட விரோத விற்பனை கட்டுப்படுத்த நடவடிக்கை

[குருநகர்]

''சட்டவிரோத திடீர் இறைச்சிக் கடைகள் நடைபெறுவதைச் சங்கம் உறுதிப்படுத்தினால் அவற்றைக் கட்டுப்படுத்த வேண்டிய சகல ஒத்துழைப்பையும் காவல் துறை வழங்கும்.''

இவ்வாறு சாவகச்சேரி காவல் பணிமனைப் பொறுப்பதிகாரி திரு. மு. கணேசலிங்கம் தெரிவித்தார்.

கடந்த 22 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சாவகச்சேரி கச்சாய் றோட் [ உதயசூரியன் வீதி ] மரியதாஸ் படிப்பகத்தில் நடைபெற்ற யாழ். மாவட்ட இறைச்சிக் கடை வியாபாரிகள் சங்கக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசுகையில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

திரு. க. தங்கராசா தலைமையில் கூட்டம் நடைபெற்றது.

இறைச்சிக்கடை வியாபாரிகள் சங்கச் செயலாளர் திரு. க.கி. கிருஷ்ணன் பேசுகையில்: ''சட்டவிரோத இறைச்சிக் கடைகளாலும், கொள்கலப் பிரச்சினையாலும் இறைச்சிக் கடை வியாபாரிகள் பல கஷ்டங்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது'' என்றார்.

சமாசத் தலைவர் திரு.மு. சிவானந்தராசா, விலைக் கட்டுப்பாட்டு அதிகாரி ஆகியோரும் உரை நிகழ்த்தினர். [21]

## தற்காலிக கொட்டகை அமைக்க அனுமதி

யாழ். மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கையால் பாதிக்கப்பட்ட பாடசாலைகளுக்குத் தேவையான தற்காலிக கொட்டகைகளைக் கட்டுவதற்கு அனுமதி வழங்கப்பட்டிருக்கிறது.

இராணுவத் தாக்குதல்களால் சேதமடைந்த பாடசாலைகளிலும் மற்றும் இடம் பெயர்ந்த மாணவர்கள் கல்வி பயிலும் பாடசாலைகளிலும் கடந்த நீண்ட காலமாக இடநெருக்கடி இருந்து வருகிறது. இந்த இடநெருக்கடியை நீக்குவதற்கு தற்காலிக கொட்டகைகள் அமைப்பதற்கு அனுமதி கிடைத்ததைத் தொடர்ந்து மேற்படி வேலைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட இருக்கிறது. [க],[ச]

## நிரந்தரநியமனம் வழங்கப்பட்டது

[பருத்தித்துறை]

கல்விச் சேவை ஆணைக்குழுவினால் தற்காலிக நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டிருந்த வடமராட்சிக் கோட்டக்கல்வி அலுவலகப் பகுதிகளைச் சேர்ந்த பதினொரு அதிபர்களுக்கு அண்மையில் முறையான நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டு நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர். [25]

## மெய் வல்லுநர் போட்டி

(பருத்தித்துறை)

வடமராட்சி கல்விக்கோட்ட பாடசாலைகளின் மெய்வல்லுநர் போட்டிகள் நெல்லியடி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் வடமராட்சி கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. வி. சே ஏகாம்பரநாதன் தலைமையில் 27-ம், 28-ம் திகதிகளில் நடைபெறவுள்ளன. இம் மெய்வல்லுநர் போட்டிகளிலும் பரிசளிப்பிலும் வடமராட்சி கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு, ச. செல்லத்துரை பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். (25)

## 'உலா' வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழக கலை வட்டத்தினரின் ஆதரவுடன் க. சட்டநாதனின் 'உலா' என்னும் சிறுகதைத் தொகுதி வெளியீட்டு விழாவும், விமர்சன அரங்கும் எதிர்வரும் சனிக்கிழமை மாலை மூன்று மணியளவில் யாழ். பல்கலைக்கழக பழைய நூலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

பேராசிரியர் கா.சிவத்தம்பி தலைமையில் நடைபெறவுள்ள இவ் வெளியீட்டு விழாவில், திருமதி அம்மன்கிளி முருகதாஸ், குப்பிளான் ஐ. சண்முகன், பேராசிரியர் அ. சண்முகதாஸ்ஆகியோர் விமர்சன உரை நிகழ்த்தவுள்ளனர்.


## திருமண அழைப்பு

**மணமகன் :** இராசலிங்கம் நவநீதகாந்தன் (சந்திரன்)
(லிங்கம் ஸ்ரோர்ஸ், காரைக்காட்டுலேன், வண்ணார்பண்ணை)

**மணமகள் :** சபாரத்தினம் திருமகள் (சாந்தி)
(ஆசிரியை யா/ஊர்காவற்துறை, புனித மரியாள் பெண்கள் பாடசாலை)

இடம் : அரியாலை ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயம்

காலம் : வைகாசி மாதம் 15 ஆம் நாள் (28 - 05 - 92) வியாழக்கிழமை 10.04 முதல் 11.12 வரை

உறவினர்களையும் நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. திருமதி
க. இராசலிங்கம்
குடும்பத்தினர்
14, காரைக்காட்டு லேன்,
வண்ணார்பண்ணை
நாச்சிமார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

திரு. திருமதி
இ. சபாரத்தினம்
குடும்பத்தினர்
சரவணைமேற்கு, வேலணை,
77/9 A. V. றோட்,
கொழும்புத்துறை,
யாழ்ப்பாணம்.

சிறப்பு வரவேற்புபசாரம் மணமகன் இல்லத்தில் 30-05-92 சனி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெறும். (2599)

### சிந்தனைக்கு

தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை
எதிரிக்கு சகுனம் பிழைத்தால் சரி என எண்ணுபவன்
ஒரு நாளும் உருப்படப் போவதில்லை
— தமிழ்ப் பழமொழி —

ஈழநாதம்

61, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 27-05-1992
தொலைபேசி
ஆசிரிபீடம் 025 2889 நிர்வாகபீடம் 2308
த. பெ. எண் 60

## சுதந்திரக் கட்சியும் புரிந்துகொள்ள வேண்டும்

இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்குத் தொடர்பாக குற்றம் சாட்டப்பட்டுள்ள தலைவர் பிரபாகரனை தம்மிடம் கையளிக்குமாறு இந்திய அரசு சிறிலங்கா அரசாங்கத்திடம் உத்தியோக பூர்வமாக கோரிக்கை விடுத்துள்ளதாக இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் தெரிவித்துள்ளார்

இந்திய அரசாங்கத்தின் இந் நடவடிக்கையானது, சிறிலங்கா அரசாங்கத்தைப் பணியவைக்கும் இராஜதந்திர தொடர் நடவடிக்கையின் ஒருபகுதியாகும். பிரேமதாசா அரசாங்கத்தைப் பணியவைக்கும் நடவடிக்கையில் இந்தியா ஈடுபட்டுள்ளமை குறித்து இப்பகுதியில் முன்னரே சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

இந்தியா தடை செய்தது போன்று விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்யுமாறு இந்தியா கொடுத்த இராஜதந்திர அழுத்தத்தை சிறிலங்கா அரசாங்கம் நிராகரித்து விட்டது. சிறிலங்காவின் இந்நடவடிக்கை இந்தியாவிற்கு. புலிகள் விவகாரத்தில் சிறிலங்கா அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என்பதைத் தெளிவாக்கியுள்ளது. ஆனால், புலிகள் தடை விவகாரத்தால் தென்னிலங்கையில் பெரும் அரசியல் நெருக்கடி ஒன்று உருவாகியுள்ளது. இந் நெருக்கடியால், அரசாங்க கட்சிக்கும் எதிர்க்கட்சிக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாடானது தமிழர் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வினை சிபார்சு செய்ய அமைக்கப்பட்ட பாராளுமன்றத் தெரிவுக்குழுவே உடைந்து போகும் நிலையை ஏற்படுத்தியுள்ளது

விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன் தற்பொழுது சிறிலங்கா அரசாங்கத்திடம் இல்லை. பிடிக்கக்கூடிய நிலையிலும் அவர் இல்லை. இது இந்தியாவிற்கும் நன்கு தெரியும். சிறிலங்கா கூறித்தான் தெரிய வேண்டும் என்பதல்ல. இலங்கையில் உள்ள கள நிலபரங்களும் இந்தியாவிற்கு நன்கு புரியும். அத்தோடு, தலைவர் பிரபாகரனை கொலை செய்ய தமது ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட இராணுவத்தால் முடியாமல் போனதையும் இந்திய அரசு மறந்து போவதற்கு அது ஒரு நீண்டகாலத்திற்கு முற்பட்ட பழைய வரலாறும் இல்ல

இந்நிலையில், தலைவர் பிரபாகரனையும் பொட்டு அம்மானையும் இந்தியா கோருவதென்பது இலங்கையில் பிரேமதாசாவின் அரசாங்கத்தைப் பலவீனப்படுத்துவதோடு, உலகரீதியில் விடுதலைப் புலிகளுக்கு அபகீர்த்தியையும், நெருக்கடிகளையும் உண்டு பண்ணுவதற்கேயாகும். ஆனால், பிரேமதாசாவின் அரசாங்கத்தைப் பலவீனப்படுத்துவதென்பது, இறுதியில் இலங்கையின் இறையாண்மையை இந்தியா எடுத்துக்கொள்வதாகவே இருக்கும்.

இன்று பிரேமதாசா அரசாங்கத்தை நெருக்கடிக்கு உள்ளாக்கும் இந்திய அரசாங்கத்தின் திட்டங்களை எதிர்க்கட்சிகள் குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக் கட்சி தற்பொழுது தனது ஆட்சியைப் பிடிக்கும் நோக்கத்திற்காக ஆதரிக்கிறது. இதற்காக பிரேமதாசா அரசாங்கத்திற்கு எவ்வளவு நெருக்கடிகள் கொடுக்க முடியுமோ அந்தளவிற்கு நெருக்கடியைக் கொடுத்தும் வருகின்றது

இதன் ஒரு கட்டமாக இனப்பிரச்சினைக்கான தீர்வை ஆராயும் பாராளுமன்றத் தெரிவுக் குழுவைப் பகிஷ்கரித்துள்ளது. அத்தோடு அரசாங்க கட்சியுடன் ஒத்துழைப்பதில்லை எனவும் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. மேலும் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்திற்கு எதிரான புதிய எதிர்ப்பு நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்ந்து வருகின்றது.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கத்திற்கு எதிராக மேற்கொண்டு வரும் இந் நடவடிக்கைகள் சுமார் 14 வருடங்களுக்கு மேலாக எதிர்க்கட்சியாக இருந்து வரும் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நோக்கில் சரியாக இருக்கலாம். அதாவது ஐக்கிய தேசியக்கட்சியை ஆட்சியில் இருந்து அப்புறப்படுத்துவது தொடர்பான விடயத்தில் மட்டும் ஆனால், இன்றைய நிலையில் சிறிலங்கா சுதந்திரக்கட்சி இந்தியாவின் இராஜதந்திர சூழ்ச்சிக்குள் சிக்கி அதன் கைப்பொம்மையாக செயற்பட முற்படுவதே ஆபத்தானதாகும்.

இந்தியா, இலங்கையில் தனியாக தமிழர் தேசிய இன விடுதலைப் போராட்டத்தை மட்டும் நசுக்கிவிடப் பார்க்கவில்லை. முழு இலங்கையையுமே தனது மேலாதிக்கத்திற்குள் கொண்டுவரவே எண்ணுகிறது 1987 இல் நடைபெற்ற இந்திய - சிறிலங்கா ஒப்பந்தமும் அடிப்படையில் அதனையே கொண்டது. தற்பொழுதும் இந்தியா அவ்வாறே எண்ணுகிறது. இந் நிலையில், புலிகளுக்கு எதிரான நடவடிக்கை என்ற போர்வையில், இந்தியா, சிறிலங்கா அரசு மீது போடும் அழுத்தங்கள் புலிகளுக்கு மட்டுமல்ல, சிறிலங்கா அரசிற்கும் என்பதை அனைவரும் புரிய வேண்டும் இதனால், பாதிக்கப்படப் போவது புலிகள் என்பதை விட சிறிலங்காவின் தன்னாதிக்கமே என்பதை சகல கட்சிகளும் புரிந்து கொள்ள வேண்டும். அதிலும் குறிப்பாக சிறிலங்கா சுதந்திரக்கட்சியும் புரியவேண்டும்.

# அரசு அதிகாரிகளை நம்பவில்லை அதிகாரிகள் அரசை நம்பவில்லை

## ஜெயலலிதா ஆட்சியில் தமிழக நிலை

''அ. இ. அ. தி. மு. க வினர் ஆட்சிப் பொறுப்பையேற்ற கடந்த எட்டு மாதத்திலும் பல விதமான தவறுகள், தடுமாற்றங்கள், காணப்படுகின்றது முதல்வரின் அணுகுமுறையிலும் நிறைய மாறுதல்கள். கடந்த சட்டமன்றக் கூட்டத்தொடரின்போது இவையெல்லாம் வெளிச்சத்துக்கு வந்தன'' என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியை சேர்ந்தவரும், சட்டமன்ற உறுப்பினருமான பழனிச்சாமி கூறியுள்ளார்.

தமிழக சட்டசபையில் மாற்றுக் கருத்துக் கூறுபவர்களின் குரல்வளையை அரசு நசுக்கப்பார்க்கிறது அரசிடம் சகிப்புத் தன்மை என்பதுவே கிடையாது அரசுக்கு எதேச்சதிகார எண்ணங்கள் தலைதூக்கிவிட்டது என்றும் தமிழக எதிர்க்கட்சித் தலைவர்கள் பலரும் குறைகூறியுள்ளனர் கடந்த 06-05 92 ஜூனியர் விகடன் இதழில் ''குமுறுகிறார்கள் எதிர்க்கட்சித் தலைவர்கள்'' என்ற தலைப்பில் வெளியான சில தலைவர்களின் கருத்துக்களை இங்கே தொகுத்துத் தருகின்றோம். அதில திரு. பழனிச்சாமி மேலும் கூறுகையில் சட்டசபைத் தொடரில் மட்டுமல்ல இந்த அரசின் அரசு நிர்வாகத்திலும் ஏகப்பட்ட குறைபாடுகள், மின் வாரியத்துறைக்கு மட்டும் குறைந்த காலத்தில் ஐந்து சேர்மன்கள் மாறியிருக்கின்றார்கள். ஆறாம்பித்து ஆறு அல்லது ஏழு மாதங்கள் கடந்துவிட்ட நாகை காயிதே மில்லத் மாவட்டத்திற்கு நிரந்தரமான கலெக்டர் அலுவலகம் இல்லை. ஐந்துமுறை இடம் மாற்றிவிட்டனர்.

முதல்வர் போட்டியிட்டு வெற்றிபெற்ற பர்சர் தொகுதியில்தான் அரசு அதிகாரிகள் முதல் அமைச்சர்கள் வரை அனைவரும் தனிக் கவனம். அங்கும் முப்பத்தெட்டு இடங்களில் ஆழ் குழாய்க்கிணறுகள் தோண்டப்பட்டு உள்ளன. இதன் மூலம் கிடைக்கும் குடிநீரால் மக்களின் பல்ஈறுகள் பாதிக்கப்படுகின்றன இது அதிகாரிகளுக்கும் தெரியும் ஆனால் முதல்வரிடம் சொல்லத் தயங்குகிறார்கள் என்றும்தெரிவித்துள்ளார்

இந்தக் கூட்டத்தொடரில் எதிர்க்கட்சிகளுக்கு தங்கள் கருத்தைச் சொல்லும் வாய்ப்பே தரப்படவில்லை என்று கூறும் ஜனதா தளம் கட்சியைச் சேர்ந்த டாக்டர் குமாரதாஸ் மேலும் கூறுகையில் முதல்வரேகூட எதிர்க்கட்சியினர் பேசட்டும் என்று அனுமதி அளித்தாலும் அவரைத் திருப்திப்படுத்த நினைக்கும் எம். எல். ஏக்கள் கூச்சல் போட்டு எதிர்க்கட்சியினரான எங்களை அடக்கிவிடுகிறார்கள் என்கிறார்.

இந்த அரசினால் உறுதியான எந்த முடிவையும் எடுக்க முடியவில்லை அதிகாரிகள் அரசை நம்புவதில்லை. அரசு அதிகாரிகளை நம்புவதில்லை. இதனால் ஏகப்பட்ட குழப்பங்கள் நீடிக்கின்றன.

பத்திரிகை தவறு செய்தால் அந்தப் பத்திரிகைபற்றி பிரஸ் கவுன்சிலிடம் முறையிடலாம் அதைவிட்டுவிட்டு எல்லாப் பத்திரிகைகளையும் பொது வாகவிரோதித்துக் கொள்ளும் போக்கை இந்த அரசு மேற்கொள்கிறது பத்திரிகையாளர்களைக் கண்டிக்கவென அவசரஅவசரமாக நிறைய செலவு செய்து விசேட கூண்டு தயாரிக்கப்பட்டது அதில் ஒருவரைக் கூட ஏற்ற முடியவில்லை. இதுவும்கூட சபைக்கு ஏற்பட்ட அவமதிப்புத்தானே என்று டாக்டர் குமாரதாஸ் மேலும் வினவியுள்ளார்: அ. இ. அ. தி. மு. க. வின் தோழமைக் கட்சியான காங்கிரஸ்காரர்கள்கூட முடை நாற்றம் பொறுக்கமுடியாமல் மூக்கைப் பொத்திக்கொண்டு வாயால் மட்டும் பாராட்டிக் கொண்டிருப்பதைப் பார்க்கிறேன் என்று பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த பண்ருட்டி ராமச்சந்திரன் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் தமிழக அரசின் முறைகேடுகள் அளவு கடந்து போகிறதே என்பதில் இந்திய அரசுக்கு கவலை இல்லாமல் இல்லை. இந்தநிலை நீடித்தால் எந்த நேரத்திலும் அறுவைச் சிகிச்சை வரலாம்.

முதலமைச்சரைப்பொறுத்த வரையில் தமிழ்நாட்டில் இருக்கிற ஆறு கோடித் தமிழர்களும் அப்படியே தன்னை ஆதரிப்பதாகவும் எம்.ஜி. ஆரை விடத் தான் பெரிய தலைவர் என்றும் பெரும் கற்பனை உலகத்தில் சஞ்சரிக்கின்றார் என்று அண்ணா புரட்சித் தலைவா தமிழக முன்னேற்றக் கழகத் தலைவரான எஸ். திருநாவுக்கரசு கூறியுள்ளார். எதிர்க்கட்சிகள் மற்றும் பத்திரிகைகளில் வரும் விமர்சனங்கள் முதல்வரின் இந்தக் கற்பனை உலகில் புகுந்து இடைஞ்சல் செய்கின்றது அதை அவரால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதன் விளைவாகத்தான் பத்திரிகைகள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றும் திரு. திருநாவுக்கரசு மேலும் கூறியுள்ளார்.

## புலிகளை ஒப்படைக்குமாறு இந்தியா கடிதம்

ராஜீவ் காந்தி கொலை வழக்கில விடுதலைப் புலிகள் தலைவர் பிரபாகரன்மீது வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருப்பதை அடுத்துப் பிரபாகரனை இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும் என்று முறைப்படி இந்திய அரசு சிறிலங்கா அரசுக்கு கடிதம் எழுதியிருப்பதாக இந்திய உள்துறை அமைச்சர் எஸ். பி. சவான் கூறியிருக்கிறார்.

இதற்கு முன்னர் பிரபாகரனை ஒப்படைக்கும்படி இந்தியா கோரிவந்ததையும் உத்தியோக பூர்வமாக சிறிலங்கா அரசை அணுகவில்லை ஆனால் இப்போது சம்பிரதாயப்படி பிரபாகரனைத்தம்மிடம் ஒப்படைக்கும் கோரிக்கையை இந்தியா, சிறிலங்கா முன் வைத்திருப்பதாக சவான் சொன்னார் இத் தகவலை வெரித்தாஸ் தெரிவித்தது,

புலிகள் இயக்கத்தின்மீது தடை விதிக்க முடியாது என்று கூறி வரும் சிறிலங்கா அரசு பிரபாகரனைப் பிடிப்பது உடனடிச் சாத்தியமல்ல என்று தெரிவித்து வருவது குறிப்பிடத்தக்கது.

### ராக்கட் தொழில் நுட்பம்

## வாக்குறுதி அளித்தபடி ரஷ்யா நடந்து கொள்ளும்

- யூ.ஆர்.ராவ்

(டில்லி)

அமெரிக்கா எதிர்ப்புத் தெரிவித்த போதிலும் இந்தியாவுக்கு பியூஜெனிக் ரொக்கட் தொழில நுட்பத்தை வழங்க ரஷ்யா வாக்குறுதி அளித்துள்ளதாக இந்திய விண்வெளி ஆராய்ச்சி துறை ஸ்தாபன தலைவர் பேராசிரியர் யூ ஆர். ராவ் தெரிவித்துள்ளார்.

விக்ரம் சாராபய் விண்வெளி மையத்தில் அவர் செய்தியாளர்களிடம் பேசும் போது அவர் இதைத் தெரிவித்தார்:

இத்தகைய தொழில் நுட்பத்தினை பெறுவதில் ஏதாவது இடையூறு ஏற்பட்டால் இந்தியா அவசர அடிப்படையில் இத் திட்டப்பணியை செயற்படுத்தும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

1995 ஆம் ஆண்டுக்குள் இந்தியா பியூஜெனிக் ரொக்கட் எஞ்சினை உள்நாட்டிலேயே தயாரிக்கத் தொடங்கி விடும் எனவும், செயற்கைக் கோள் செலுத்தும்வாகனங்களில் தன்னிறைவு அடைந்துவிடும் எனவும் தெரிவித்தார்.

## இந்தியாவுடன் வர்.உறவு; சீனா ஆர்வமாகவுள்ளதாம்

(டில்லி)

கூட்டு தொழில் முயற்சி திட்டங்களை உருவாக்குவது உட்பட சீன - இந்தியா ஆகிய இரு நாடுகளிடையேயும் வர்த்தக பொருளாதார உறவுகளை வளர்த்துக் கொள்வதில் சீனா அதிக ஆர்வம் கொண்டுள்ளதாக சீனவின் ஆறு நாள் சுற்றுப்பயணத்தை முடித்துக் கொண்டு இந்தியா திரும்புகையில் ஜனாதிபதி வெங்கட்ராமன் விமானத்தில் பத்திரிகையாளர்களிடம் இதைத் தெரிவித்தார்.

எல்லைப் பகுதியில் படை பலத்தைக் குறைத்துக் கொண்டுநம்பிக்கை உணர்வை தோற்றுவிப்பதான ஒரு நடவடிக்கையாக துருப்புக்களின் நடமாட்டம் பற்றிய தகவல்களை பரஸ்பரம் பரிவர்த்தனை செய்து கொள்ளலாம் என்ற தனது யோசனையை சீனத் தலைவர்கள் ஏற்றுள்ளதாகவும் தெரிவித்தார்.

## குடியரசுத்தலைவர்பதவிக்கு பாரதீய ஜனதா போட்டியிடும்

(டில்லி)

இந்தியாவின் குடியரசுத் தலைவர் மற்றும் உப குடியரசுத் தலைவர் பதவிகளுக்கான தேர்தலில் போட்டியிடுவது பற்றி ஆலோசித்து வருவதாக பாரதீய ஜனதாக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான அடல் பிஹாரி வாஜ்பாய் கூறியுள்ளார்.

லூதியானாவில் செய்தியாளர்களிடையே பேசிய அவர் மேலும் கூறுகையில், பஞ்சாப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்காக அனைத்து கட்சிக் கூட்டமொன்றிற்கு பிரதமர் நரசிம்மராவ் அழைப்பு விட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார். இதன் மூலம் பஞ்சாபில் பயங்கரவாதத்தை தனிமைப்படுத்துவதோடு பஞ்சாப் மக்களின் அபிலாஷைகளுக்கு தீர்வு காணவும் உதவும் என்றும் குறிப்பிட்டார்.

அதிபர்களின் அலட்சியம்

# விடைத்தாள் மீளாய்வு விண்ணப்பிக்கவில்லை

(அலுவலக நிருபர்)

பாடசாலை அதிபர்களின் அசமந்தப் போக்கினால் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை விடைத்தாள்களை மீளாய்வு செய்வதற்கு மாணவர்கள் விண்ணப்பிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என யாழ் கல்வித் திணைக்களத்தில் புகாரிடப்பட்டுள்ளது.

அண்மையில் வெளிவந்த க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேற்றில் அதிருப்தி கண்ட பாடசாலைப் பரீட்சார்த்திகள் தமது பெறுபேற்றை மீளாய்வு செய்வதற்கு விண்ணப்பிக்கமுற்பட்ட போதே இவ்விண்ணப்பங்களை ஏற்க பாடசாலை அதிபர்கள் மறுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது

இதற்கான விண்ணப்பப் படிவங்களைப் பெற்று அவற்றைப் பூர்த்தி செய்து தமது பாடசாலை அதிபர்களிடம் ஒப்படைத்த போது சில பாடசாலை அதிபர்கள் தமக்கு இதுபற்றி எதுவுமே தெரியாது என கைவிரித்துள்ளனர்.

இதனால் செய்வதறியாத மாணவர்கள் சிலர் கடந்த சில நாட்களாக யாழ். கல்வித் திணைக்களத்திற்கு நேரில் வந்து குறிப்பிட்ட அதிபர்கள் பற்றி புகாரிட்டுள்ளனர்.

பரீட்சைப் பெறுபேறு வெளியாகிய முப்பது நாட்களுக்குள் பாடசாலை பரீட்சார்த்திகள் தத்தமது பாடசாலை அதிபர்களூடாகவும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் நேரடியாகவும் தமது மீளாய்வுக்கான விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைத்தல் வேண்டும் என்பது கடந்த பல வருடங்களாக இருந்துவரும் நடைமுறை ஆகும். மீளாய்வதற்கு விண்ணப்பிப்பது தொடர்பான விபரங்கள் ஏற்கனவே வெளியாகியது தெரிந்ததே. (ச)

# ராஜீவ் கொலை வழக்கு ஆங்கிலத்தில் விசாரணை

(டில்லி)

சென்னை தனி விசேட நீதிமன்றில் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தியின் கொலை வழக்கு நீதி விசாரணை சாட்சியங்கள் மற்றும் நீதிமன்ற நடவடிக்கைகளை ஆங்கிலத்தில் பதிவு செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

தமிழ் நாட்டில் நீதிமன்ற நடவடிக்கைகள் அனைத்தும் தமிழ்மொழியிலேயே இருக்க வேண்டும் எனசட்டம் உள்ளது இதற்கமையவே அங்கு அனைத்து வழக்குகளும் நடைபெற்று வருகின்றன ஆனால் தனிவிசேட நீதிமன்றில் ராஜீவ் காந்தி கொலை வழக்கு நீதி விசாரணைகள் ஆங்கிலத்தில் இருக்கவேண்டுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கு உலக அளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும், வழக்கு விசாரணையில் ஆவணங்கள் யாவும் மேல் நீதிமன்றம் வரை செல்ல வேண்டி இருப்பதாலும், ஆங்கிலத்தில் பதிவு செய்ய வேண்டி உள்ளதாக அதிகாரிஒருவர் தெரிவித்துள்ளார்.

## நினைவஞ்சலி கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வரலாற்றுத்துறை மாணவனாகிய சி பிரபாகரன் அவர்களின் மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலிக்கூட்டம் யாழ் பல்கலைக்கழக மறுமலர்ச்சிக் கழகத்தினால் இன்று 27 ஆம் திகதி புதன்கிழமை யாழ் பல்கலைக்கழகக் கைலாசபதிகலையரங்கில் பிறபகல் 3 மணிக்கு இடம் பெறும்.

இக்கூட்டத்தின் சிறப்புநிகழ்ச்சியாக "இனப்பிரச்சினையை ஆட்சியாளர் கையாண்ட விதமும், அதனால் உபகண்ட அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களும்" என்ற தலைப்பில் மு. திருநாவுக்கரசு அவர்களின் சொற்பொழிவு நடைபெறும். இக்கூட்டததிற்கு அனைவரையும் கலந்துகொள்ளுமாறு மறுமலர்ச்சிக்கழகம் கேட்டுக் கொள்கின்றது.

## மட்டு -படகு

வள்ளியம்மை அல்லது சித்திரா (வயது 20, வைரமுத்து அரங்கநாதன் (வயது 20, செட்டிபாளையம்), செல்லத்துரை (வயது60, மண்முனைத்துறை, படகோட்டி) ஆகியோரே பலியாகியவர்களாவர்.

இவ்விபத்து கடந்த ஞாயிறன்று இடம்பெற்றது தெரிந்ததே.

## குடும்பப்பதிவு

அதிபரினூடாக குடும்பப்பதிவு பிரிவிற்கு உடனடியாக அனுப்பி அதற்குரிய குடும்பப்பதிவு அட்டைகளைப் பெற்று, 31 05 92 க்குமுன் அம்மக்களுக்கு விநியோகிக்குமாறு வலியுறுத்தப்படுகிறார்கள்.

கல்வி, தொழில் நோக்கங்களுக்காக யாழ். மாவட்டம் வந்து ஜீவிக்கின்ற தனிநபர் குடும்பங்களைப் பொறுத்தவரை அவர்கள் தங்களது நிறுவனங்களின் சிபாரிசுடன் தங்கள் பிரிவுக் கிராமசேவையாளரை அணுகி குடும்பப்பதிவு அட்டையைப் பெற்றுக்கொள்ளுமாறுவலியுறுத்தப்படுகிறார்கள்.

இவையாவும் 31-05-92க்கு முன் நிறைவுபெற வேண்டும். 31-05-92 க்குப் பின் குடும்பப் பதிவு அட்டை பெறாதவர்கள் தங்களது தேவைகளுக்காக அலுவலகங்களை அணுகும் போது மிகுந்த சிரமங்களை எதிர்நோக்க வேண்டியிருக்கும் என அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

எனவே, ஒவ்வொரு குடும்பமும், தனி மனிதர்களும் தங்களுக்குரிய குடும்பப்பதிவு அட்டை வேலைகளைத் தங்கள் பகுதிக்கிராமசேவையாளரிடம் தொடர்புகொண்டு நிறைவு செய்யவுமென யாழ். செயலக குடும்பபபதிவுப் பிரிவு கேட்டுக்கொள்கின்றது.

## நினைவூட்டுகிறோம்

மே மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் பெறப்பட்ட நிரந்தர போக்கு வரத்து அனுமதி அட்டைகள் யாவும் இம்மாதம் 31 ஆம் திகதி வரையுமே செல்லுபடியாகும். மேலதிக விபரங்களுக்கு அருகில் உள்ள போக்கு வரத்து அனுமதி வழங்கும் காரியாலயத்தை நாடவும். [சி-4421]

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992ஆம் ஆண்டு மேமாதம் 27 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

நுண்கலை மாணவர்கள்

# வகுப்புக்கள் பகிஷ்கரிப்பு; கண்டன ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

இசைக்கற்கை நெறிக் கலைத்திட்டத்தில் மாற்றங்களைச் செய்வதற்கென யோசனையை முன்வைப்பதற்கான குழுக் கூட்டத்தில் மருதனாமடம் இராமநாதன் நுண்கலைக் கழகப் போதனாசிரியர்கள் அவமதிக்கப் பட்டமையும். பண்ணிசைக் கற்கை நெறியில் ஏற்பட்ட திடீர்மாற்றத்தையும் கண்டித்து இராமநாதன் நுண்கலைக்கழக மாணவர்களும், போதனாசிரியர்களும் வகுப்புக்களைப் பகிஷ்கரித்து வருகின்றனர்.

சுமார் 250 மாணவர்களும் மற்றும் போதனாசிரியர்களும் நேற்று முன்தினம் முதல் இந்தப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

நுண்கலை மாணவர்கள் நேற்று முற்பகல் சைக்கிள்களில் ஊர்வலமாக வந்து யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் நுண்கலைத்துறைத் தலைவரின் அலுவலகத்துக்கு முன்னால் சுலோக அட்டைகளுடன் கூடி நின்றனர்.

இந்தக் கண்டனப் போராட்டத்தில் கலந்து கொண்ட மாணவர்கள் ஒரு பல்கலைக்கழக ஆசிரியருக்கு எதிரான சுலோக அட்டைகளையும் தாங்கி நின்றதை அவதானிக்க முடிந்தது.

மாணவர் சார்பில் மாணவர் பிரதிநிதிகள் நால்வர் நுண்கலைத்துறைத் தலைவர் பேராசிரியர் கா சிவத்தம்பியைச் சந்தித்து மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்தனர்.

மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

21 - 05 - 1992 அன்று பிற்பகல் 03 மணிக்கு நடைபெற்ற பண்ணிசைக் கற்கைநெறி சம்பந்தமான இறுதிக் கூட்டத்தில் எமது போதனாசிரியர்கள் அவமதிக்கப்பட்டமையை நாம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

அத்துடன் எமக்கான பண்ணிசைக் கற்கை நெறியில் பாடத்திட்டம் சம்பந்தமாக எமது ஆசிரியர்களின் ஆலோசனைகள் மதிக்கப்படாமையையும் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

மகஜரில் குறிக்கப்பட்ட விடயங்கள் குறித்து சம்பந்தப்பட்டவர்கள் சம்பந்தப்பட்ட போதனாசிரியர்களிடம் மன்னிப்புக் கேட்கும்வரை வகுப்புக்களைத் தொடர்ந்தும் பகிஷ்கரிக்கப்போவதாக மகஜரில் தெரியப்படுத்தப் பட்டுள்ளது.

இதற்கிடையில் மாணவரின் இப்போராட்டம் குறித்து சிரேஷ்ட பேராசிரியர்கள் இருவருக்கிடையில் பல்கலைக்கழக ஆசிரியர் பொது அறை முன்னால் உச்சக்கட்ட வாக்குவாதம் இடம் பெற்றது. மதிய உணவு இடைவேளையான தால் இந்தக் களேபரத்தைப் பெருந்திரளான மாணவர்கள் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

மகஜரைத் துணை வேந்தரிடமும், கலைப்பீடாதிபதியிடமும் சமர்ப்பித்துவிட்டு நுண்கலை மாணவர் பிற்பகலில் அமைதியாகக் கலைந்து சென்றனர். [05]

# அரசுக்கு எதிரான போர் எதிர்க்கட்சிகள் ஆயத்தம்

சிறிலங்கா அரசாங்கத்திற்கு எதிராக எதிர்க்கட்சிகள் மேற்கொண்டுவரும் போராட்டத்தை தீவிரப்படுத்தப் போவதாக எதிர்க்கட்சி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாராளுமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் இப் போராட்டங்கள் நடாத்தப்படும் அரசதரப்பினர் மக்கள் மத்தியில் நடத்தும் பிரசாரத்தை முறியடிக்கும் விதத்தில் வாழ்க்கைச் செலவு உயர்வு, ஜனநாயகவிரோத செயல்கள் மற்றும் சில விவகாரங்களை மக்கள் மத்தியில் பிரசாரம் செய்ய திட்டம் தீட்டப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது

# அதிகாரப் பரவலாக்கல் இவ்வருடத்துக்குள் பூர்த்தி -பிரேமதாசா

அதிகாரப்பரவலாக்கல் இவ்வருடத்துக்குள் பூர்த்தியாக்கப்பட்டு விடும் எனவும் இது பத்திரிகைகளில் மட்டும் வெளிவருவதாக இல்லாமல் அது மக்கள் மனங்களையும் சென்றடைய வேண்டும் என அண்மையில் மொனராகலை மாவட்டத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசிய ஜனாதிபதி ஆர். பிரேமதாசா தெரிவித்தார்.

# ஊரடங்கு அமுல்

(கொழும்பு)

யாழ்.மாவட்டத்தில் இன்று காலை 6.00 மணி தொடக்கம் காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாக சிறிலங்கா கூட்டுப்படைகள் தலைமைச் செயலகம் அறிவித்துள்ளது

# நிவாரணக் கொடுப்பனவு முற்றாக நிறுத்தம்

(மட்டக்களப்பு)

அம்பாறை மாவடடத்தில் இருந்து சிறிலங்கா இராணுவ நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்து தற்பொழுது களுவஞ்சிக்குடி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தங்கியிருக்கும் நூற்றுக்கணக்கான தமிழ் குடும்பங்களிற்கான சகல நிவாரணக் கொடுப்பனவுகளும் நிறுத்தப்பட்டுள்ளது.

இதனால் இக் குடும்பங்கள் பட்டினிச்சாவை எதிர்நோக்கியிருப்பதாகவும் குழந்தைகள் பாலுணவு இன்றி அவலநிலைக்குத் தளளபபடடிருப்பதாகவும் கூறபயடுகிறது.

பாதிக்கப்பட்டிருக்கும் இக் குடும்பங்களுக்கு உடனடியாக உலர் உணவு வழங்கும் படி தமிழர் புனர்வாழ்வுச் சபைத் தலைவர் திரு. C அருள்பிரகாஸ் மட்டக்களபபு மாவட்ட அரசாங்க அதிபரிடம் வேண்டுகோள் விடுத்திருக்கிறார்.

## மெய்வல்லுனர் போட்டி

யாழ் கோட்டத்திற்குட்பட்ட கொத்கணிப் பாடசாலைகளுக்கிடையிலான மெய்வல்லுனர் போட்டி அடுத்த மாதம் மூன்று தினங்களுக்கு நடைபெறவுள்ளன.

இம் மெய்வல்லுனர் போட்டிகள் எதிர்வரும் இரண்டாம், மூன்றாம், நான்காம் திகதிகளில் யாழ் வைத்தீஸ்வரா மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறும் என யாழ் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. வேலாயுதம் அறிவித்துள்ளார். (ச)

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

திருமலை நட்சத்திரம் விளையாட்டுக்கழகத்தின் முதலாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ் கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் ஏழுபேர் கொண்ட மட்டுபடுத்தப்பட்ட உதைபந்தாட்டப் போட்டிகளின் வரிசையில் இன்று மாலை 3 30 மணிக்கு யங் கென்றிஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து கண்ணசன் விளையாட்டுக்கழக அணியும், 4 30 மணிக்கு அல்வாய் நண்பர்கள் அணியை எதிர்த்து சென்பேரிஸ் அணியும் மோதுகின்றன.

## இந்தியாவின்

அனுப்பிப் பல்லாயிரக்கணக்கான ஈழத் தமிழர்களைக் கொன்று குவித்தது, காவிரிப் பிரச்சினையில் தொடர்ந்து தமிழகத்திற்குஇழைக்கப்படும அநீதி கர்நாடகததில் நூற்றுக் கணக்கான தமிழர்கள படுகொலை, லட்சக்கணக்கான தமிழர்கள்அகதிகளாகவிரட்டியடிக்கப் பட்டது. திட்டங்களில் தமிழகம் புறக்கணிப்பு போன்றவைகளால் இந்திய அரசின் மீது வெறுப்படைந்திருக்கும்தமிழக இளைஞர்களை மிரட்டி ஒடுக்கவே அபாண்டபழி சுமத்தி விடுதலைப் புலிகள் இயக்கம் தடைசெய்யப்பட்டுள்ளது.

10 நாட்களுக்கு முன்வரை போதிய ஆதாரங்கள் இல்லாமல் விடுதலைப் புலிகளைத் தடைசெய்ய முடியாது என்று கூறிய சவான் திடீரெனத் தடைவிதித்ததன் மர்மம் என்ன? 10நாட்களில்ஆதாரம் கிடைத்து விட்டதா?

அ.இ.அ.தி.மு.கவின் தயவில் பதவியில் நீடிப்பதால் ஜெயலலிதா ஆட்டுவித்தபடியெல்லாம் ஆட வேண்டிய பரிதாப நிலையிலுள்ள மத்திய அரசிடம் இருந்து இதைத்தவிர வேறெதுவும் எதிர்பார்க்க முடியாது.

உண்மையான தமிழுணர்வு கொண்டவர்கள் அனைவரும் இந்திய அரசின் இந் நடவடிக்கையைக் கண்டிப்பார் என அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## சிறுமி

தகவல்கள் தெரிவிக்கின்றன. இரும்பியாக இரும்புக்கம்பியை சூடேற்றி சிறுமியின் தொடையில் சுட்டிருக்கிறார் இதனால் சிறுமிக்கு பல சூட்டுக் காயங்கள் ஏற்பட்டன. மேற்படி கொடூர சித்திரவதை பற்றி அறிந்த அயலவர் தமிழீழக் காவல்துறையினரிடம் முறையிட்டனர் இதனைத் தொடர்ந்து காவல்துறையினர் ஸ்தலத்திற்கு விரைந்து வீட்டு எஜமானியைக் கைது செய்துள்ளனர் சிறுமி மீட்டெடுக்கப்பட்டு சிகிச்சைக்காக மருத்துவ மனையில சேர்க்கப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டார். இச்சிறுமி தற்பொழுது காவல் துறையின் பாதுகாப்பில் உள்ளார். எஜமானி தொடர்ந்தும் காவல்துறையினரால் தடுத்து வைக்கப்பட்டிருக்கிறார்.